பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
12 09 2024 **THURSDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சிவில் விமானப் போக்குவரத்துத்துறை தற்போது பெரிய அளவில் மாற்றங்களை கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரியின் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

3. ஏழை மக்களுக்கு இலவச உணவு தானியம் வழங்கும் திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் 96 ஆயிரத்து 41 கோடி ரூபாய் உணவுக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட, குறுகிய தூர இலக்கினை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணை இன்று வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

5. தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jithin Arjunan, Anisha** மற்றும் **Unnathi Ayyappa** தங்கப்பதக்கம் வென்றனர்.

>>>>><<<<<

சிவில் விமானப் போக்குவரத்துத்துறை தற்போது பெரிய அளவில் மாற்றங்களை கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆசிய – பசிபிக் விமான விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மக்கள் எளிதாக பயணங்களை மேற்கொள்வதற்கு இந்த மாற்றங்கள் உதவிடும் என்றும் பிரதமர் கூறினார்.

>>>>><<<<<

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர சீதாராம் யெச்சூரியின் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், மாணவத் தலைவராக அரசியல் பயணத்தை தொடங்கி, தேசிய அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

கட்சிப் பாகுபாடின்றி அனைவரிடமும் நட்புணர்வுடன் பழகக்கூடிய பண்பாளர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சிறப்பாக பணியாற்றியவர் என்றும், அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராக செயல்பட்ட சீதாராம் யெச்சூரியின் மறைவு தமக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இடதுசாரி இயக்கத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு இது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. **D**. ராஜா கூறியுள்ளார்.

பல்வேறு பிரச்சினைகளில் சீதாராம் யெச்சூரியுடன் இணைந்து பணியாற்றியுள்ளதாகவும் இடதுசாரிகளின் ஒற்றுமைக்காக அவருடன் இணைந்து பாடுபட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர் பருவத்திலிருந்து அவருடன் இணைந்து பணியாற்றியதை மறக்க இயலாது என்றும் திரு. **D**. ராஜா கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு, மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சீதாராம் யெச்சூரியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

72 வயதான சீதாராம் யேச்சூரி, சுவாசக்கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டு, புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, கடந்த சில தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், இன்று பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்தார்.

பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சீதாராம் யெச்சூரியின் உடல் புதுதில்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நாளை மறுநாள் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், சீதாராம் யெச்சூரியின் விருப்பத்தின்படி அவரது உடல் மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளுக்காக எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.

**>>>>><<<<<**

ஏழை மக்களுக்கு இலவச உணவு தானியம் வழங்கும் திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் 96 ஆயிரத்து 41 கோடி ரூபாய் உணவுக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஏழை மக்களின் நலனை கருத்தில் கொண்டு கோவிட் பாதிப்பு காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இலவச உணவு தானியம் வழங்கும் திட்டம், உலகின் மிகப் பெரிய உணவு பாதுகாப்பு திட்டமாக திகழ்கிறது என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட, குறுகிய தூர இலக்கினை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணை இன்று வெற்றிகரமாக வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் கூறியுள்ளது.

ஒடிசா மாநிலம், சண்டிபூர் கடலோரப் பகுதியில் இந்த ஏவுகணை சோதித்து பார்க்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த சோதனையின் போது திட்டமிட்ட இலக்குகள் துல்லியமாக தாக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

போர்க்கப்பலிலிருந்து செலுத்தும் வகையில் இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

பொதுப் போக்குவரத்தில் மின்சார பேருந்துகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கனரக தொழில்துறை அமைச்சர் திரு. எச்.டி. குமாரசாமி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

3 ஆயிரத்து 435 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுக்கான இந்த திட்டத்தின்கீழ் 38 ஆயிரம் மின்சார பேருந்துகள் செயல்பாட்டுக்கு வரும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

தொழிற்கல்வி பயில்வதை எளிதாக்கும் வகையில், மத்திய அரசின் திறன் மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் தேசிய பயிற்றுவிப்பு ஊடக நிறுவனத்தின் காணொலிகள் தமிழில் கிடைப்பதற்கு ஏதுவாக யுடியூப் அலைவரிசை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி தொடர்பான அனைத்து அம்சங்களையும் இந்த அலைவரிசையில் இலவசமாக பெற்று பயனடையலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தொழிற்பயிற்சி பாடங்கள் தமிழ் மொழியில் இதில் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு கிடைக்க வகை செய்யும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவக் காப்பீடு கிடைப்பதற்கு வகை செய்யும் இந்த திட்டத்தின் மூலம், 6 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நலனுக்கான திட்டங்களை பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாகவும் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

இதற்கிடையே, மத்திய அரசின் இந்த திட்டத்திற்கு தமிழகத்தைச் சேர்ந்த பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இந்த திட்டத்தின் பலன் கிடைக்கும் என்று அறிவித்திருப்பது சிறப்பான நடவடிக்கை என்று நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரும், வருவாய் உச்சவரம்பின்றி அனைவருக்கும் இந்த திட்டத்தின் பலன் கிடைக்கும் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - கருத்தாளர்கள் 63 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஹரியானா சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறவுள்ளது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 16ஆம் தேதி கடைசிநாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

இதேபோல், ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிகட்டமாக அடுத்த மாதம் 1ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 40 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் நாளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 17ஆம் தேதி கடைசி நாளாகும்.

**>>>>><<<<<**

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின்கீழ் போட்டியிடுவது என மதச்சார்பற்ற ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா முடிவு செய்துள்ளது.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் நிறுவனத் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜித்தன்ராம் மாஞ்சி, தங்கள் கட்சி போட்டியிடவுள்ள தொகுதிகளை கண்டறியும் பணி தொடங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

ஜார்க்கண்டில் ஹேமந்த் சோரன் அரசுமீது மக்கள் அதிருப்தியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, மக்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களை ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா அரசு நிறைவேற்றியிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கம் வென்றது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் நீளம் தாண்டுதல் பிரிவில் **Jithin Arjunan**–தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் வட்டு எறிதலில் **Anisha** தங்கப்பதக்கத்தையும், **Amanat Kamboj** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 100 மீட்டர் தடைஓட்டத்தில் உன்னத்தி அய்யப்பா தங்கப்பதக்கத்தையும், சபிதா டோப்போ வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 110 மீட்டர் தடைஓட்டத்தில் **Nayan Pradip Sarde** வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>>END<<<<<**